**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | | |
|---|---|---|---|
| Calendar | : | | **CC513/2004** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of witness for | | **Prosecution :** | **PW - 41** |
| | | **Defence :** | |
| | | **Court :** | |
| Name | : | மரியபுஷ்பம் | |
| Father's / Husband Name | : | ஜோசப் உடையார் | |
| Village | : | திருக்கானூர்பட்டி | |
| Taluk & District | : | தஞ்சாவூர் மாவட்டம். | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | /2018 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2018**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.கண்ணகி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, தட்டச்சர் ச.சுரேஷ்**

**CC513/2004** Date: 06.08.2018

முதல் விசாரணை

நான் தஞ்சாவூர் மாவட்டம் திருக்கானூர்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா1ஐ தெரியாது. ஆஜர் 1வதுஎதிரியை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியாது. சுமார் 15வருடங்களுக்கு முன்பாக மாதம் ரூ.150 வீதம் சுமார் 25மாதங்கள் கட்டினேன். கடைசியாக ரூ.4ஆயிரம் நகை எடுப்பதற்காக கணபதி என்பவரிடம் அவரது நகைக்கடையில் கட்டினேன். அதன் பின்னர் கணபதி என்பவர் கடையை காலி செய்துகொண்டு அங்கிருந்து ஓடிவிட்டார். என்னிடம் காட்டப்படும் கணபதி தங்க மாளிகையில் அவர்கள் வழங்கிய நகையின் மதிப்பீட்டு சீட்டு ஆகும். அதில் ரூ.8707-க்கு ரூ.4ஆயிரம் பணம் ஏற்கனவே செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மாத தவணையாக நான் கட்டியதையும் அதில் கழித்துள்ளார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் ரூ.150 தவணைத்தொகை கட்டியதற்கான புத்தகத்தினை என் கணவர் இறந்த பின்பு எங்கு வைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

நான் போலீசார் விசாரணையில் ரூ.150வீதம் 25மாதங்களுக்கு கட்டினேன் என்றும், கடைசியில் ரூ.4000ஆயிரம் பணம் கட்டியதாக சொல்லியுள்ளேன் அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் நேரடியாக பணம் கட்டவில்லை ஏஜெண்ட் வந்து பணம் வாங்கி செல்வார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை சம்மன் கொடுத்தபோதுதான் வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் எனது முன் விசாரணையில் சொன்னது போல் நான் சீட்டு எதிலும் சேரவில்லை என்றாலும், பணம் எதுவும் கட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் போலீசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் முன் விசாரணையில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.